24th March 1961]

அரிஜனங்களை கட்டிவைத்து அடிக்கக்கூடியவருமான ஒரு நபருக்கு பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக சிபாரிசு செய்த அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் அரிஜனங்களுக்கு ஆதரவாக இருக்கமுடியாது என்று ஏன் குறிப்பிட்டேன் என்றால், இந்த பாரத நாட்டில் ஆறில் ஒரு பங்கு அரிஜனங்கள் இருக்கிறார்கள். இவ்வாறு இருக்கக் கூடியவர்கள் பிரிந்தால் அவர்களுடைய பலம் குறையும். ஆகவேதான் பிரியவேண்டும் என்ற கருத்தை அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொன்னேன், அதோடு கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ யாருக்கோ தவறுதலாக பரிசு கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார்கள். இதைப்பற்றி கலெக்டர் அவர்களும், அரிஜன நல அதிகாரி அவர்களும். தாசில்தார் அவர்களும் நன்றாகப் பரிசீலனை செய்துதான் முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Oil-pressing work (Central Jail, Vellore)

1059 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் சென்ட்ரல் ஜெயிலில் செக்கு ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகிறதா ?

(இ) என்னென்ன எண்ணெய்கள் ?

(உ) எண்ணெய்க்கான பொருள்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவா அல்லது தனி நபர்களிடமா வாங்கப்படுகின்றன ?

(எ) டெண்டர் கேட்டு வாங்கப்பட்டதா ?

(ஐ) ஆம் என்றால், யார் யாருக்கு டெண்டர் நோட்டீஸ் போனது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Gingelly oil alone is manufactured.

(*c*) The raw materials for the manufacture of gingelly oil are being obtained by tender system. At present, gingelly oil seeds are being purchased from the Thorapadi and Allapuram Co-operative Stores Limited, Thorapadi, because of the cancellation of the contract for supply of gingelly oil seeds during 1960-61. The requirements in cane jaggery are being obtained by local purchase as and when required from the cheapest source after calling for quotations.

(*d*) Yes, Sir.

(*e*) Tender notices were sent to all approved contractors.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இப்போது வாங்கக்கூடிய எள்ளில் கல்லும் மண்ணும் கலந்து ஜெயிலுக்கு சப்ளை செய்யப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது விஷயமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி தகவல் இப்போது என்னிடம் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இப்போது ஜெயிலிலே எண்ணெய் உற்பத்தி செய்வது எவ்விதமாக நடைபெறுகின்றது. முன்னால் சிதம்பரம் பிள்ளை போன்றவர்கள் செக்கிழுத்தார்கள் என்று நாம் எல்லாம் அறிந்திருக்கின்றோம். அந்த முறையில்தான் இப்போதும்

கைதிகள் செக்கிழுக்கின்றார்கள் என்று தவறாக யாராவது நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது செக்கை மாடுகள்தான் இழுக்கின்றன.

SRI A. VEDARATHNAM : சிறைகளில் இப்போது உபயோகிக்கப் படுகிற செக்குகள் வார்தா முறை செக்குகளா ? இல்லையென்றால் அவைகளை உபயோகிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனி யாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Political prisoners (release)

* 1060 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to release all political prisoners; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : In the case of Kasi Rajan and Rajagopalan, the Government have released them even before the expiry of the sentence. So, will the Government show mercy to other political prisoners also and release them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have considered this particular question and they have decided not to do anything just now.

SRI K. VINAYAKAM : Will the Government desist from releasing such of those prisoners who have committed loot, murder and arson in the name of politics?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But I cannot give an assurance to the hon. Member. Prisoners will be released when their term expires (Laughter).

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வெள்ளையன் காலத்தில் கனம் விநாயகம் அவர்கள் சொன்னார்களே, அதைவிடவும் மோசமான சார்ஜ்களையெல்லாம் போட்டு பலர் தண்டிக்கப்பட்டார்கள். அந்தக் காரணத்தின்பேரிலேயே காசிராஜன், ராஜகோபாலன் போன்றவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தார்கள், அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்தோம். ஆகவே இன்றையதினம் சிறைகளில் இருக்கின்ற வர்கள் எந்த முறையில் தவறுகள் செய்தார்கள் என்பது வேறு பிரச்னை. அவர்கள் வேறு எந்தவிதத்திலோ தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகளாக 10 ஆண்டுகள் சிறையில் இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற தேர்தலை முன்னிட்டாவது உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கு அமைச்சர்கள் குழுவில் முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?